www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

# NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

04 JANUARY 2022 - WEDNESDAY

Pages - 09

E Paper - # 022 / Y 01 / 2023

Web: WWW.NEWSPLUS.LK

E-mail: editor@newsplus.lk

## முஸ்லிம் விவகார திணைக்களத்தின் பணிப்பாளர் பதவி வெற்றிடம்!

முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவி வெற்றிடமாகியுள்ளது. 02 »»




# குட்டித் தேர்தல்: அறிவிப்பு இன்று!

**340 மன்றங்களின் காலம் இன்றுடன் நிறைவு!**

**தேர்தலுக்கு 10 கோடி ஒதுக்கீடு!**

நாட்டின் 340 உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்தப்படுவது தொடர்பான அறிவித்தல் இன்று புதன்கிழமை வெளியிடப்படவுள்ளது.

தேசிய தேர்தல் ஆணையர் குழு இதற்கான தீர்மானத்தை இன்று எடுத்து தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள் மூலம் அதற்கான அறிவிப்பை தெரிவிக்கவுள்ளது. தேர்தல் நடத்தப்படுமா இல்லையா என்ற வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியிலே தேர்தல் ஆணைக்குழு இன்று 02 »»



## போனஸ் விவகாரம்: அறிக்கை கோரும் ஜனாதிபதி

நஷ்டத்தில் இயங்கி வரும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் போனஸ் கொடுப்பனவு 02 »»

## தேர்தல் ஒத்திவைக்கப்பட்டால் மக்கள் புரட்சி வெடிக்கும்

**பேராசிரியர் சரித ஹேரத் எச்சரிக்கை!**

தேர்தல் ஒத்திவைக்கப்பட்டால் நாட்டில் பயங்கர விளைவுகள் ஏற்படும் அது ஜனநாயகத்தின் இறுதியான உத்தியாகக் கூட இருக்கலாம் என பாராளுமன்ற 02 »»

## ஊவா மாகாண சபையில் முஸ்லிம் அதிகாரிகள் புறக்கணிப்பு

**ஆளுநரின் முடிவுக்கு கண்டனம்!**

அரசாங்கத்தின் புதிய ஓய்வூதிய சுற்றறிக்கைக்கு அமைவாக 2022.12.31ஆம் திகதியுடன் ஓய்வுபெற்ற அதிகாரிகளின் வெற்றிடம் மற்றும் வருடாந்த இடமாற்றங்களுக்கு அமைவாக ஊவா மாகாணத்திலுள்ள 02 »»





## வெற்றிமிக்க எதிர்காலத்தின் வாரிசுகளாக செயற்படுவோம்

**புத்தாண்டு நிகழ்வில் பிரதமர் தினேஷ்!**

பிரதமர் அலுவலகத்தின் ஊழியர்கள் 2023 புத்தாண்டில் கடமைப் பணிகளை 02 »»

## “கையறு நிலையில் தலைமைகள்” தலையெடுக்கும் சுயேட்சை குழுக்கள்

(சுஐப் எம்,காசிம்)

உள்ளூராட்சித் தேர்தலுக்கு அரசியல் கட்சிகளிலும் பார்க்க,சுயேச்சைக் குழுக்கள்தான் அதிக ஆர்வம் செலுத் தி வருவதாக,பிராந்திய 02 »»

## மூன்று முக்கிய துறைகள்

**அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம்**




மின்சாரம், பெட்ரோலியம் மற்றும் வைத்தியசாலை சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்தியாவசிய பொது சேவைகள் சட்டத்தின் இரண்டாம் பிரிவிற்கு அமைய இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கிணங்க,

1. மின்சாரம் வழங்கல் தொடர்பான சகல வேவைகள், 02 »»








சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரியவின் அனுசரணையுடன் இலங்கை சீன சமூக மற்றும் கலாசார அமைப்பு ஆகியன இணைந்து அநுராதபுரம் விலச்சிய சோபித தேரர் கிராமத்தில் வசிக்கும் 190 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இலங்கை சீனத் தூதுவராலயம் வெளிநாடுகளிலுள்ள சமாதானத்துக்கும் அபிவிருத்திக்குமான சீன நட்புறவுச் சங்கங்கள் இதற்கு நேரடியாக அனுசரணை வழங்கியிருந்தன. முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய,சோபித தேரர் விஹாரை அதிபதி, ASLCSCC இன் தலைவர் இந்திரானந்த அபேசேகர மற்றும் பிரதேச செயலாளர் உட்பட பல பிரமுகர்கள் இதில் கலந்து கொண்டனர்.

# சவளக்கடை தாருல் ஹிக்மா கலாபீடத்திற்கு நீர்த்தொகுதி மற்றும் கிணறு வழங்கி வைப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் எம்.பி. நவாஸ் , ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும், கல்முனை மாநகர பிரதிமுதல்வரும்,ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளருமான ரஹ்மத் மன்சூர் அவர்களிடம் முன்வைத்த கோரிக்கு அமைவாக நிர்மாணிக்கப்பட்ட சவளக்கடை, தாருல் ஹிக்மா கலாபீடத்திற்கான குடிநீர், வுழு செய்வதற்கான நீர்த்தொகுதி மற்றும் பொதுக்கிணறு என்பவற்றை ரஹ்மத் மன்சூர் அவர்கள் பாவனைக்காக அண்மையில் கையளித்து வைத்தார்.

இதன்போது, கலாபீடத்தில் இருக்ககூடிய குறைநிறைகளை அறிந்துகொண்டதோடு எதிர்காலங்களில் தன்னால் இயலுமான உதவிகளைச் செய்யவிருப்பதாகவும் இந்நிகழ்வை ஒருங்கிணைப்பு செய்த லு.று.ஆ.யு பேரவைக்கும் தனது விஷேட நன்றிகளையும் இதன்போது ரஹ்மத் மன்சூர் தெரிவுத்துக்கொண்டார்.

## தேசிய மட்டத்தில் கதக் மற்றும் பரத நாட்டிய போட்டியில் நு/நல்லிளை பாற்றி மகளிர் பாடசாலை முதலிடம்



(செ.திவாகரன்)

கடந்த புதன்கிழமை அகில இலங்கை ரீதியாக அநுராதபுரத்தில் இடம்பெற்ற சங்கீத மற்றும் பரதப் போட்டியில் புத்தாக்க நடனப் பிரிவில் நுவரெலியா நல்லிளை பாற்றி மகளிர் பாடசாலையை சேர்ந்த தரம் 12 கலைப்பிரிவில் கல்விப்பயிலும் மாணவி செல்வி. நிரோஷி பங்கேற்று முதலாமிடத்தைப் பெற்று சாதனையை பதிவு செய்துள்ளார் .

## வெற்றிக்காக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆரம்பிக்கும் நிகழ்வு பிரதமர் தினேஷ் குணவர்தன அவர்களின் தலைமையில் இன்று (2023.01.01) கொழும்பில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த பிரதமர்..

தேசத்தின் எதிர்காலத்தை வெற்றிகரமானதாக ஆக்குவதற்கான உறுதிமொழியை வழங்கி அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு உறுதிபூணும் தருணம் இது. சுதந்திரம் அடைந்து நூறு ஆண்டுகள் என்ற இலக்கை எட்டுவதற்கான அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலமையிலான அரசாங்கம் முழு நாட்டு மக்களுடனும் ஒன்றிணைந்துள்ளது.

இன்று இந்த உறுதிமொழியை வழங்கும் போது, நாட்டின் ஜனாதிபதி அலுவலகம், அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள், நாடு முழுவதும் பரந்துள்ள அரச சேவை நிறுவனங்கள், எங்களுடன் இணைந்துள்ள இலட்சக்கணக்கான அரச ஊழியர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான தனியார் துறை ஊழியர்களினதும் ஒரே எதிர்பார்ப்பு நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதாகும். இதன்போது அரச சேவைக்கு மிகவும் முக்கியமான பணி ஒதுக்கப்பட்டுள்ளது. மக்களுக்கும் முழு நாட்டிற்கும் அரச சேவையினை செயற்திறனாகவும் ஒழுங்குமுறையாகவும் பயனுறுதிமிக்கதாகவும் கொண்டுசெல்வதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

வரலாற்றில் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பின்னடைவுகளையும் மீள் எழுச்சியையும் அனுபவித்த ஒரு நாடு என்ற வகையில் மீண்டும் கீர்த்திமிக்கதொரு நாடாக கட்டியெழுப்ப முடியும். வரலாற்றில் மிகவும் சவாலான காலகட்டத்திற்கு நாம் முகம்கொடுத்துள்ளோம். வளர்ச்சியடைந்த, உணவில் தன்னிறைவு பெற்ற நாடாக மாறவும், பல்வேறு துறைகளில் புதிய அபிவிருத்திகளில் ஈடுபடும் புதிய தலைமுறையை கட்டியெழுப்பவும், எமது கரங்களை நீட்டி, அரச துறையின் அனைத்துக் கடமைகளையும் நிறைவேற்றுமாறு பிரதமர் என்ற முறையில் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அனைவரும் ஒரே நாடாக, ஒரே தேசத்தின் பங்காளிகளாக ஒரே அபிவிருத்தி செயன்முறையின் வெற்றிமிக்க எதிர்காலத்தின் வாரிசுகளாக எமது பணிகளை மேற்கொள்வோம் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க மற்றும் பிரதமர் அலுவலகத்தின் ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

## கையறு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நிருபர்கள் தெரிவிக்கின்றனர்.சிறிய தேர்தலாக இருப்பதால்,பெரிதளவாக முயற்சிக்க த் தேவையில்லை என்ற துணிச்சலே, சுயேச்சை குழுக்களை உஷாராக்கி உள்ளது. மேலும்,உரிமைகளை மீட்டெ டுக்கப் புறப்பட்ட சிறுபான்மை தலை மைகள் சோரம்போனமை,கிளைகள் மற்றும் குழுக்களாகக் குறுகியமையும் பிரதான பங்களித்திருப்பதாக சமூக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

உசுப்பேற்றும்,உணர்ச்சியூட்டும் பிரச்சாரங்களால் சமூகத்தை ஒற்று மைப்படுத்த முடியாத கையறு நிலைக் கு தலைமைகள் வந்துள்ளமையும், சுயேச்சைக் குழுக்கள் தலையெடுக்க காரணாமாகியுள்ளது.இதனால்,மந் திராலோசனையில் ஆழ்ந்திருந்த சில தலைமைகள்,பின்னாலிருந்து சில சுயேச்சைக் குழுக்களை இயக்குவதா கவும் தெரிய வந்துள்ளது.

முஸ்லிம் தனித்துவத்தின் ஏக பிரதிநி திகளாக தங்களையே சுய பிரகடனம் செய்யும் போட்டி மனோபாவங்களால், முஸ்லிம் கட்சிகளைக் கூட்டணியாக இணைக்கும் முயற்சிகளும் தோல்வி அடைந்துள்ளன.இந்தச் சந்தர்ப்பங்க ளும் அதிகமான சுயேச்சைக் குழுக்க ளை களமிறக்கியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி அல்லது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளிகளாக அறிமுகமாகிப் போட்டியிடுவது, ஆரோக்கியமானதில் லை என்று சில தலைமைகள் கருதுவ தாகவும் தெரிய வருகிறது.

இவ்வாறு அறிமுகமாகிப் போட்டியிட்டுத் தோல் வியடைந்தால்,பின்னால் வரவுள்ள தேர்தல்களையும் பாதிக்கலாம் என்ப தே இதற்கான காரணமாகும்.இதனா ல் சுயேச்சைக் குழுக்களுக்குப் பின் னால்,தலைமைகள் ஒழிந்துகொள்ளு ம் நிலைமையே ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும்,சிறுபான்மைச் சமூக ங்களின் ஏக பிரதிநிதிகளுக்கான போட்டிகள் யாழ்ப்பாணம் மற்றும் அம்பாறை மாவட்டங்களிலேயே பிரதானம் வகிக்கவுள்ளன. இதனால், இம்மாவட்டங்களில் அதிக சுயேச்சை க் குழுக்கள் களமிறங்குவது,ஏக பிரதி நிதியாக வரத்துடிக்கும் கட்சிகளின் கழுத்துக்களில் கத்திகளை வைப்பதா கவே அமையப் போகிறது.



சிலாவத்துறை வரலாற்று நூல் வெளியீட்டு விழாவின் போது அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர் எச்.எம்.எம் .அக்ரம் நூலாசிரியர் எஸ். எம் அன்ஸாரிடமிருந்து பிரதி ஒன்றை பெற்றுக் கொண்ட போது எடுக்கப்பட்ட படம்

## ஊவா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மாகாண, வலய இடமாற்றங்கள் மற்றும் இற்றைப்படுத்தலுக்கான கடிதங்களை ஊவா மாகாண ஆளுநர் கௌரவ ஏ.ஜே.எம்.முஸம்மில் அவர்கள் அண்மையில் வழங்கி வைத்தார்.

ஆனாலும் சேவை மூப்புடைய இ.க.நி சேவையைச் சேர்ந்த முஸ்லிம் அதிகாரிகள் இதில் புறக்கணிக்கப்பட்டுள்ளதுடன் ,பண்டாரவளை,மற்றும் வியலுவ ஆகிய வலயக் கல்விப் பணிப்பாளர்களாக இவரை விடவும் கனிஷ்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளமை கண்டிக்கத்தக்க செயலாகும் என இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஆ.டு.ஆ.நியார் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

## முஸ்லிம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கடந்த ஒன்றரை வருட காலமாக பணிப்பாளர் பதவி வகித்த முன்னாள் தூதுவர் இப்ராஹிம் அன்சார் கடந்த 31 ஆம் திகதி முதல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதனால் இந்தப் பதவி வெற்றிடமாகியுள்ளது.

புதிய பணிப்பாளரைத் தெரிவு செய்வதற்காக புத்த சாசன விவகார அமைச்சு இன்று புதனன்று நேர்முகப் பரீட்சை நடாத்தவுள்ளது.

இரு மாதங்களுக்கு முன் இப்பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இதன்படி இலங்கை நிர்வாக சேவையைச் செய்த மூவர் விண்ணப்பித்துள்ளனர்.

அரநாயக பிரதேச செயலாளர் பைஸல் ஆப்தீன் அநேகமாக இப்பதவிக்கு தெளிவாகுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இப் பதவிக்கு விண்ணப்பித்திருக்கின்ற முதலாம் தர நிர்வாக சேவை உத்தியோகத்தர் அவராவார்.

## குட்டித்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இத்தீர்மானத்தை அறிவிக்கவுள்ளது.

பதவிக்காலம் நீடிக்கப்பட்ட 340 உள்ளூராட்சி மன்றங்களுடைய பதவிக்காலம் இன்றுடன் முடிவடைகின்றது. அதன்படி அடுத்த தேர்தல் வரும் விசேட ஆணையாளர்கள் இந்த உள்ளூராட்சி மன்றங்களை நிர்வாகிப்பார்கள்.

341 உள்ளூராட்சி மன்றங்களில் ஒரு உள்ளூராட்சி மன்றத்தைத் தவிர ஏனைய 340 உள்ளூராட்சி மன்றங்களும் கலைக்கப்பட்டு புதிதாக தேர்தல் நடத்தப்படவுள்ளது. பெந்தரல்பிட்டிய உள்ளூராட்சி மன்றம் தேர்தல் வழக்கொன்றின் காரணமாக தாமதித்து ஆரம்பிக்கப்பட்டதால் அந்த உள்ளூராட்சி மன்றம் தொடர்ந்து இயங்கும் என தேர்தல் ஆணைக்குழு அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதற்கு தயாராகி வருகின்ற நிலையில் தேர்தலுக்காக 10 கோடி ரூபாய் கடந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்பட்ட பிறகு முதன் முறையாக தேர்தல் ஒன்று நடத்தப்படுவது இம்முறையாகும். தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி புஞ்சி ஹேவாவின் தலைமையில் இன்று தேர்தல் ஆணைக்குழுவின் கூட்டத்திலே இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது. தேர்தலை ஒத்திப் போடுவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை. ஏனெனில், தேர்தல் உள்ளூராட்சி மன்றங்களுடைய பதவிக்காலத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்கு அதிகாரம் இருக்கின்றது. அதன் பின் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

## தேர்தல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

புது வருடத்தை முன்னிட்டு புது ஜனக சபாபே என்ற புதிய கட்சி நடாத்திய செய்திகள் மாநாட்டிலே அவர் இதனை தெரிவித்தார்.

தேர்தல் ஒத்திவைக்கப்பட்டால் கடந்த அரகலயை விட மோசமான நிலை இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு சவால் மிகு வருடமாக இருந்தது. அரசை எதிர்த்து மக்கள் வீதிக்கு வந்தார்கள். இதைப்போன்றதொரு மோசமான நிலை ஏற்படலாம் என பேராசிரியர் மேலும் தெரிவித்தார்.

## மூன்று...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிக்கை ஒன்றை கோரியுள்ளார்.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களிடம் இருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளது.

## மூன்று...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

2. பெட்ரோலிய உற்பத்திகள் - எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம்,

3. வைத்தியசாலைகள், மருந்தகங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களில் நோயாளர்களின் பராமரிப்பு, வரவேற்பு, பாதுகாப்பு, சிகிச்சையளித்தல்

ஆகியன அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.



ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளராக (தமிழ்) உமாச்சந்திரா பிரகாஷ் அண்மையில் (29) எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான கௌரவ சஜித் பிரேமதாஸவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உதவி செயலாளர்களில் ஒருவராகவும்,ஐக்கிய மகளிர் சக்தியின் பிரதித் தலைவராகவும்,எதிர்க்கட்சித் தலைவரின் ஒருங்கிணைப்புச் செயலாளராகவும் கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.






நியாஸ் மௌலவி பவுண்டேசனின் நற்பணி மன்றமும் பீர்சாகிப் ஜூம்ஆப் பள்ளிவாசலும் இணைந்து தற்போதைய பொருளாதார பிரச்சினையில் பாதிக்கப்பட்டுள்ள மூவினத்தையும் சேர்ந்த ஏழை மாணவர்களை தெரிவு செய்து அவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வருகின்றது. இந்த வகையில் 2023 புதுவருடத்தை முன்னிட்டு புதுவருட தினத்தில் கொழும்பு 12 நியாஸ் மௌலவி பவுண்டேசனில் வைத்து மூவினத்தையும் சேர்ந்த சுமார் 490 மாணவர்களுக்கு பாடசாலைப் பைகள், அப்பியாச கொப்பிகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.பவுண்டேசனின் பணிப்பாளர் மௌலவி எல். எம்.லமீர் காபிஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு மாநகர சபையின் பிரதிமேயர் எம்.ஐ. இக்பால், மற்றும் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் ஒமர் காமில், அகில இலங்கை அஹதிய்யா பாடசாலைகளின் தலைவர் எம்.ஆர்.எம்.சறூக், கெசல்வத்த பொலிஸ் நிலையத்தின் உயர் பொலிஸ் அதிகாரி உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# ஜே.வி.பி மற்றும் தூய ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர்கள் குதிரையில் இணைவு!

(நூருல் ஹுதா உமர்)

கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தூய ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளராக கல்முனை மாநகர சபை தேர்தலில் களமிறங்கிய கமால் முகம்மட் அஸ்கர் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர் இப்றாகீம் குமாயூன் ஆகியோர் தேசிய காங்கிரசின் கொள்கைகளை ஏற்று அக்கட்சியில் இணைந்து கொண்டனர்.

தேசிய காங்கிரஸின் கல்முனை அமைப்பாளர் இப்திகர் ரிஷாத் சரீப் முன்னிலையில் தேசிய காங்கிரஸ் மருதமுனை பிரதானியும், கல்முனை மாநகர சபை உறுப்பினருமான சமட் ஹமீடின் அழைப்பின் பேரில் அவர்கள் இருவரும் தேசிய காங்கிரசில் இணைந்து கொண்டனர்.



தேசிய காங்கிரஸ் தலைவர் முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லாவின் சமூகம் சார் முன்னெடுப்புக்கள், அரசியல் கொள்கைகள், அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் திருப்தி கண்டமையே இவர்கள் தேசிய காங்கிரசில் இணைந்து கொள்ள காரணம். இந்த இணைவு நிகழ்வில் தேசிய காங்கிரசின் மருதமுனை மத்தியகுழு மற்றும் இளைஞர் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.




# காத்தான்குடி அல்-அக்ஸா பள்ளிவாசல் உத்தியோகபூர்வமாக திறந்து வைப்பு!



புதிய காத்தான்குடி அல்-அக்ஸா பெரிய ஜூம்ஆ பள்ளிவாசல் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்த நஜகழ்வு கடந்த 30 அன்று இடம்பெற்றது. நிகழ்வில் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாவின் அழைப்பில் இலங்கை வந்துள்ள பலஸ்தீன் மஸ்ஜிதுல் அக்ஸா இமாம் ஷெய்க் அலி ஓமர் அல் அப்பாஸி பிரதம அதிதியாக கலந்துகொண்டு பள்ளிவாசலை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்ததுடன் குத்பா பிரசங்கத்தையும் நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# அரங்கம்

# தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது தானே - ரணில் கேள்வி

**நுவரெலியாவில் இருந்து புது வருடத்தை வரவேற்ற ரணில்**

2023 ஆம் ஆண்டு உதயமாகப் போவது அரசியல் ரீதியாக களகளப்பாக ஓர் ஆண்டாகவே 2023 ஆம் ஆண்டு உதயமாகப் போகின்றது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறுமா அல்லது ஒத்திப்போடப்படுமா என்ற கேள்விகளுடன் புது வருடம் உதயமாகவிருக்கிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புத்தாண்டு கடைசி வாரத்தை நுவரெலியாவிலே களித்தார். அவர் நுவரெலியாவிலே நத்தார் கொண்டாட்டத்திலும் இணைந்து கொண்டார். நுவரெலியாவில் தங்கியிருக்கும் போது ஜனாதிபதிக்கு கிடைத்த தகவல் பல வருடங்களுக்குப் பிறகு கண்டிப் பிரதேசம் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டதாகும். ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுடன் தொலைபேசியில் ஜனாதிபதி தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை உடனுக்குடன் வழங்கினார். சிறிது காலத்துக்குப் பிறகு கண்டி பிரதேசத்தில் அக்குரணை உட்பட பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பெருந்தொகையான சேதங்கள் ஏற்பட்டிருப்பது பற்றி தனக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு தனது செயலாளரிடம் கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் கண்டி மாவட்ட செயலாளரோடு தொடர்பு கொண்டு உடனடியாக சேதங்கள் பற்றிய அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை வழங்கினார். மறுபுறம் ஜனாதிபதிக்கு நெருங்கிய ஒருவரின் மூலமும் அங்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பு பற்றி தகவல்கள் கிடைக்கப் பெற்றன. அவர் தெரிவித்திருந்த தகவல்களின் படி புகையிரத நிலையம், பஸ் தரிப்பு நிலையம், போகம்பர வாவி உட்பட பல பிரதேசங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அநேகமாக அனுமதி பெறாத நிர்மாணங்களால் இந்த வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக உத்தியோகபூர்வ பற்றற்ற தகவல்கள் ஜனாதிபதியின் செயலாளருக்கு கிடைத்தது. இது பற்றி ஜனாதிபதிக்கு அறிவித்ததும் மாவட்ட செயலளாரின் அறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கும் படி ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

**தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது தானே - ரணில் கேள்வி**

இதேநேரம் தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சித் தேர்தலை நடாத்துவதற்கு தயாராகி வருகின்ற தகவலும் ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டது. ஜனாதிபதியிடம் நிதியமைச்சின் அதிகாரியொருவர் ஜனாதிபதி அவர்களே, இது தேர்தல் நடத்த பொறுத்தமான காலமல்ல. இப்போது தான் பொருளாதாரத்தை சற்று உயர்த்திக் கொண்டு வருகின்றோம். பல வருடங்களின் பின் அதிக விளைச்சலும் கிடைக்கவிருக்கின்றது. அவற்றை கொள்வளவு செய்வதற்கும் பெருந்தொகையான பணம் தேவை. வறியவர்களுக்கு வாழ்வளிப்பதற்கு பல திட்டங்களையும் செயற்படுத்தவுள்ளோம். இந்தக் கட்டத்தில் தேர்தலுக்கு பணத்தை செலவு செய்தால் இவற்றை செய்யமுடியாது போகுமென மத்திய வங்கியின் அதிகாரியொருவர் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, வரவு - செலவு திட்டத்தில் பத்து பில்லியன் ரூபா தேர்தலுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது தானே என்று கேள்வி எழுப்பினார். புள்ளி விபரங்களின் படி ஒவ்வொன்றுக்கும் பணம் ஒதுக்கப்படுகின்றது. ஆனால் இதற்கு முன் இருந்த நிலை அல்ல இப்போதிருப்பது. அன்று திறைசேரி கையிருப்பில் நான்கு - ஐந்து பில்லியன் கோடி டொலர் பணம் இருந்தது. இப்போது அந்த நிலைமை இல்லையென்றும் அவர் தெரிவித்தார். இந்த நிலையில் தேர்தலுக்குப் பணத்தை செலவு செய்தால் எரிபொருள் கியூ, கேஸ் கியூ போன்ற ஆபத்து மீண்டும் ஏற்படுமென்றும், எனவே இக்காலப் பகுதி தேர்தலுக்கான காலப் பகுதி அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

பொருளாதாரத்தை பலப்படுத்தி வாழ்க்கைச் செலவை அதிகரித்த பின்னரே தேர்தலை நடாத்த வேண்டுமெனவும் மற்றொரு அதிகாரி தெரிவித்தார். இவற்றையெல்லாம் செவிமடுத்திலிருந்த ஜனாதிபதி எதுவும் பதிலளிக்காமல் இருந்தார். அதே நேரத்தில் தனது பாராளுமன்ற விவகார ஆலோகர் அகு மாரசிங்க ராஜனாமா செய்த தகவலை ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டது. சகல குற்றச்சாட்டுக்களிலும் அவர் விடுவிக்கப்படும் வரை அவரை எந்த அலுவல்களிலும் தொடர்புபடுத்த வேண்டாமென ஜனாதிபதி தன் செயலாளருக்கு பணிப்புரை வழங்கினார்.

**மின்சார நெருக்கடியை எதிர்கொள்ள ஒரு மின்குமிழை அணைக்க ஆலோசனை**

மின்சார பிரச்சினை பற்றியும் தேடிப் பார்க்குமாறு ஜனாதிபதி தனது செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார். ஜனவரி 5 ஆம் திகதி 60 ஆயிரம் மெட்ரிக்தொன் நிலக்கறியை தாங்கிய கப்பலொன்று வரவிருப்பதாகவும் அவ்வாறு மூன்று கப்பல்கள் இம்மாதத்தில் வரவிருப்பதால் மின்சாரத்தை தடையின்றி விநியோகிக்க முடியுமென்றும் ஜனாதிபதியின் செயலாளர் ஜனாதிபதிக்கும், மின்சக்தி அமைச்சருக்கும் தெரிவித்தார்.

குறைந்த பட்சம் ஒரு வீட்டில் ஒரு மின்சாரக் குமிழையாவது அணைத்து இச்சந்தர்ப்பத்தில் நெருக்கடிக்கு உதவமுடியுமென்றும் அதற்கான ஆலோசனைகளை மக்களுக்கு வழங்குமாறும் ஜனாதிபதியின் செயலாளர் உயரதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

**நீண்ட இடைவேளைக்குப் பிறகு இரு சிறுபான்மையினருக்கு அமைச்சுச் செயலாளர் பதவி**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எட்டு அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்களையும், மூன்று மாகாண அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்களுக்கும் நியமனங்களை வழங்கினார். நீண்ட இடைவேளைக்குப் பிறகு அமைச்சின் செயலாளர் பதவிகளுக்கு ஒரு தமிழரும், ஒரு முஸ்லிமும் உள்வாங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. கடந்த காலங்களில் தமிழர்களோ, முஸ்லிம்களோ அமைச்சுச் செயலாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இளைஞர் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளராக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மகேஷன் நியமிக்கப்பட்டார். அதேபோன்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளராக நிர்வாக சேவையின் மூத்த உத்தியோகத்தர்களின் ஒருவராக எம்.நயூமுதீன் நியமிக்கப்பட்டார். இவர்கள் முதலாம் திகதி முதல் பதவியேற்கவுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நுவரெலியாவில் தங்கியிருக்கும் போது அம்பேவல பால் உற்பத்தி நிலையத்துக்கு விஜயம் செய்தார். பால் உற்பத்தி அதிகரிப்பது தொடர்பாக ஜனாதிபதி அதிகாரிகளுடன் விரிவாக கலந்துரையாடினார். அம்பேவல பால் உற்பத்தி நிலையத்துக்கு அருகிலுள்ள 30 ஏக்கர் காணியை பால் தொழிற்சாலைக்கு வழங்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். ஜனாதிபதி நுவரெலியா விஜயத்தை முடித்துக் கொண்டு ஞாயிறு அன்று கொழும்பு திரும்பி 2 ஆம் திகதி திங்களன்று அரசாங்க அதிகாரிகளை சத்தியப்பிரமாணம் செய்து ஆரம்பிக்கவுள்ளார்.

**ஆகூ மாரசிங்க - ஹிருணிகா சண்டை வலுப்பெறுகிறது**

**புத்திர பத்திரனவும் மாட்டிக் கொண்டாரா?**

அரசியல் அரங்கில் இவ்வாரத்தில் கூடுதலாக பேசப்படுகின்ற விடயம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதியின் ஆலோசகருமாக இருந்த அகு மாரசிங்க நாயைப் புணர்ந்ததாக ஹிருணிகா பிரேமசந்திர பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்தாகும்.

அகு மாரசிங்கவின் மனைவி ஆதர் ஷாவும், ஹிருணிகாவும் பத்திரிகையாளர் மாநாட்டில் நாயுடன் புணருகின்ற புகைப்படங்களையும் வீடியோ காட்சிகளையும் செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டிருந்தார்கள். இது பொய்யான தகவல்கள் என்றும், தன்னை அவமானப்படுத்த எடுத்த நடவடிக்கை எனவும் கோரி அகு மாரசிங்க இவர்களுக்கு எதிராக ஒன்றரை பில்லியன் ரூபா நஷ்டஈடு கோரி வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளார்.

செம்மைப்படுத்தப்பட்ட வீடியோவொன்றை வெளியிட்டதன் காரணமாக தன்னை பற்றிய தவறான கருத்துக்கள் பரப்பப்பட்டிருப்பதாக அகு மாரசிங்க நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார். நளின் ராஜபக்ஷ என்ற சட்டத்தரணி இதற்கான அறிவுறுத்தலை அறிவித்துள்ளார். இதேநேரம் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரனவுடன் அகு மாரசிங்கவின் மனைவி ஆதர்ஷா கரதன உடன் தொலைபேசியில் பேசிய விடயங்கள் வெளிவந்து மற்றொரு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவு தொடர்கிறது**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாருக்குரியது என்பது தொடர்பாக அதிகாரப் போட்டி இப்போது மும்முரமடைந்துள்ளது. மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தலைமைப் பொறுப்பில் இருக்கின்ற நிலையில், அரசோடு இணைந்து செயற்படுகின்றவர்களை கட்சியில் இருந்து நீக்கியுள்ளார். இவ்வாறு கட்சியில் இருந்து நீக்கப்பட்ட விவசாய அமைச்சர் மஹிந்த அரசவீர ஜனவரி முதலாம் திகதி கதிர்காமத்தில் சமய வழிபாட்டு நிகழ்ச்சியை நடத்தவுள்ளார். டிசம்பர் 31 ஆம் திகதி இந்த நிகழ்வு நடைபெறுமென ஊடகங்களுக்கு அமரவீர வெளியிட்டுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உண்மையான அணியினர் தாங்கள் என கூறுவருகின்றனர். கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர அதனை மறுத்துள்ளார். தனது கட்சி நடத்தும் பின்கமவை வேறு சிலர் ஆக்கிரமதித்திருக்கிறார்கள் என்று தயாரிசிறி ஜயசேகர தெரிவித்திருக்கின்றார். இதேநேரம் கதிர்காமத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளில் எந்தவொரு கட்சி ஆதரவாளர்களும் கலந்து கொள்ளக் கூடாதென ஜயசேகர பணிப்புரை விடுத்திருக்கிறார்.

கிரிவெகர விகாரையிலே இந்த சமய நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன.

**உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டாக இணைந்து போட்டியிட கட்சிகள் மும்முரம்**

மார்ச் மாதத்தில் நடைபெறவிருப்பதாகக் கூறப்படும் உள்ளூராட்சித் தேர்தலில் பல கட்சிகள் கூட்டாக இணைந்து போட்டியிடத் தயாராகிவருகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, நிதகஸ் ஜனதா சபாவ, உத்தர லங்கா சபாகய, 49ஆம் படையணி, அநுர பிரியதர்ஷன யாப்பாவின் குழு, இலங்கை மக்கள் கட்சி என்பன ஒன்றிணைந்து போட்டியிடுவதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளன. இது தொடர்பாக இக்கட்சித் தலைவர்களிடையே பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருடன் விரிவாக பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளனர்.

டலஸ் அழகப்பெரும, ஜி.எல். பீரிஸ் ஆகியோர் தமது கட்சி சார்பில் அபேட்சகர்களுடைய பட்டியலைத் தயாரித்து வருவதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. கலாநிதி சரித ஹேரத், தொழிற்சங்க தலைவரான சுமித் விஜேசிங்க, லிலித் பியுன் பெரேரா ஆகியோர் பட்டியலைத் தயாரிப்பதில் முக்கியமாக ஈடுபட்டிருக்கின்றனர். சமித் விஜேசிங்க மொட்டுக் கட்சியின் தொழிற்சங்க தலைவராக மட்டுமன்றி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய சகாவுமாவார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், வடக்குக் கிழக்கில் அநேக உள்ளூராட்சி மன்றங்களில் தனித்தும், ஏனைய மாவட்டங்களில் சஜித் அணியுடன் சேர்ந்து போட்டியிடவுள்ளனர். வடகிழக்குக்கு வெளியே சில பகுதிகளில் வெற்றி சாதகமாக உள்ள பிரதேசங்களில் தனித்தும் போட்டியிடத் தயாராகி வருவதாக கட்சி முக்கிஸ்தர் ஒருவர் தெரிவித்தார். நியமனப் பத்திரம் கோரப் பட்ட பின்பே இறுதித் தீர்மானம் எடுக்குமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸூம் போட்டியிடுவது பற்றி ஆராய்ந்து வருகின்றனர். வடக்கு கிழக்கில் தனித்தும், ஏனைய மாவட்டங்களில் வழமை போன்று கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதற்கு ஆராய்ந்து வருவதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2022 JANUARY 04 - WEDNESDAY
Email: editor@newsplus.lk
FB: newsplustamil

## போதைப் பொருளுக்கு அடிமையாதலும் தடுப்பு நடவடிக்கைகளில் இருக்கும் சவால்களும்

முஸ்லிம் சமூகத்திற்குள் போதைப் பொருள் ஊடுருவி மிக மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்திக் கொண்டுருக்கின்றது. பாடசாலை மாணவர்கள் முதல் இளம் தளைமுறையினர் வரையில் நாளுக்குநாள் அடிடையாகும் வீதம் உயர்வடைந்துகொண்டே போகின்றது. எதிர்காலத்தில் எமது இளம் சந்ததியினருக்கு ஏற்படப் போகின்ற மோசமான விளைவுகள் குறித்து சிந்திக்கையில் மிகவும் கவலையாக இருக்கின்றது. அண்மைக்காலமாக ஐஸ் என்ற புதிய வகை போதைப் பொருளால் மேலும் புதிய பாதிப்புக்கள் உருவாகி வருகின்றன.

முஸ்லிம் அல்லாத மாற்று சமூகம் இந்த நாட்டிற்கு பெரியளவிலான போதைப் பொருட்களை வெளிநாடுகளில் இருந்து கொண்டு வருபவர்கள் முஸ்லிம் போதைப் பொருள் வியாபாரிகள் என்ற பாரிய குற்றச்சாட்டை சுமத்தி எமது சமூகத்தை தேசிய அரங்கில் தலை குணிய வைத்து வருகின்றனர். போதைப் பொருட்களை விற்பனை செய்பவர்கள் முஸ்லிம்கள் என்றும் அவர்கள் திட்டமிட்ட அடிப்படையில் பௌத்த இளைஞர்களின் எதிர்காலத்தை நாசம் செய்து வருகின்றனர் என்று குற்றம் சுமத்தி வருகின்றதையும் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஆனாலும் இத்தகைய குற்றச் செயல்களில் இன மத, பேதம் இன்றி எல்லாச் சமூகத்தையும் சேர்ந்தவர்கள் ஈடபடுவது வெளிப்படையாகும். எனினும் சிறைகளில் குற்றச் செயல்களில் ஈடுபட்டு கண்டு பிடிக்கப்பட்டு குற்றவாளிகளாக தண்டனை அனுபவிப்பவர்களில் 23மூ முஸ்லிம் இளைஞர்கள் என்ற ஒரு தகவலும் இருக்கின்றது.

குறிப்பாக போதைப் பொருள் காரணமாக முஸ்லிம் சமூகமும் வெகுவாகப் பாதிக்கப் பட்டிருக்கின்றது. மொத்த சனத்தொகையில் 100.000 பேருக்கு 1600 பேர் என்ற அடிப்படையில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களது விகிதம் இருப்பதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்ற. உத்தியோகபூர்வமான அறிக்கைகள் இவ்வாறு இருந்தாலும் இந்த தொகை மேலும் அதிகமாக இருக்கும் என்றே கருத முடிகின்றது. போதைப் பொருளுக்கு அடிமையானவர்களின் வயதுப் பருவத்தை அவதானிக்கையில் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களே அதிகம் உள்ளனர். அண்மைக்காலங்களில் ஏற்பட்டுள்ள நிலைமைகளை அவதானிக்கையில் ஐஸ் என்ற போதைப் பொருளால் பாடசாலை மாணவர்கள் அடிமையாகும் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே போகின்றது. அதிலும் எமது பெண்பிள்ளைகளும் இவ்வாறு போதைப் பொருட்களுக்கு அடிமையாகின்றனர் என்ற தகவல்களை அறியும் போது எமது இதயம் படபடக்கின்றது. எமது சமூகம் எங்கு போகின்றது, இன்னும் 10 வருடங்களில் இந்த சமுதாயம் எப்படியான ஒரு நிலையில் இருக்கும், என்று சிந்தித்தால் மிக மோசமான ஒரு பிரதிபலனே கிடைக்கும்.

போதைப் பொருள் விற்பனை செய்பவர்கள் இளம் தலைமுறையினரை அதிலும் அதிகமாக பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்தே பரிமாற்றத்தை மேற்கொண்டு வருகின்றனர். இந்த பருவத்தினரை போதைப் பொருளுக்கு அடிமையாக்கி விட்டால் அதனால் போதைப் பொருள் வியாபாரிகளுக்கு நீண்ட கால அடிப்படையில் நன்மையடைய முடிகின்றது. குறுகிய வழியில் சுலபமான முறையில் விரைவில் செல்வந்தராக மாறுவதற்கான ஒரே வழியாக போதைப் பொருள் வியாபாரம் அமைந்திருக்கின்றது. மறுபுரமாக ஒரு சமூகத்தில் உள்ள முதுகெழும்பாகக் கருதப்படக் கூடிய இளம் தலைமுறையினர் மிக மோசமான முறையில் இந்தப் போதைப் பொருளால் சீரழிந்து கொண்டிருக்கின்றனர். ஒருவர் போதைப் பொருளுக்கு அடிமையாகிவிட்டால் அவருக்கு புணர் வாழ்வளித்தாலும் அவரை சமூக நீரோட்டத்திற்குள் இணைப்பதென்பது மிகவும் கடினமான செயலாகும்.

போதையூட்டப்பட்ட பாக்குத்தூள் வகைள், பீடா, இனிப்பு வகைகள், சுவிங்கம் வகைகள், மென்பான வகைகள் உட்பட இவற்றோடு ஹிரோய்ன், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் பாடசாலைகளுக்கு அருகாமையிலும் விற்கப்பட்டு வருவது நாட்டில் பரவலாக கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய வியாபாரங்களில் ஈடுபடுபவர்கள் பாடசாலை மாணவர்களை விலையுயர்ந்த கையடக்க தொலைபேசிகள், பணம் போன்றவற்றை வழங்கி ஆசை காட்டி இத்தகைய பொருட்களின் விற்பனைக்கு பழக்கி வருகின்றனர். அவர்கள் ஊடாக ஏனைய மாணவர்கள் இலக்கு வைக்கப்பட்டு இவற்றுக்கு அடிமையாக்கப்பட்டு வருகின்றனர். பாடசாலை மாணவர்களுக்கு சம்பந்த மில்லாதவர்கள் ஒரு சில பாடசாலை மாணவர்களை அனுகி சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தும் கழியாட்ட நிகழ்வுகளை ஏற்பாடு செய்தும் அல்லது தந்திரேபாயமான முறையில் சந்திப்புக்களை ஏற்பாடு செய்தும் பாடசாலைப் பருவத்தினர்களை போதைப் பொருளுடன் தொடர்புபடுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறான செயல்களில் ஈடுபடும் மாணவர்கள் எப்போதும் பெற்றோருக்கு கட்டுப்படாத வர்களாகவும், மோசமான நடத்தைகளுக்கு அடிமையானவர்களாகவும், சமூகத்தில் அல்லது பாடசாலையில் ஒழுக்கமான்புகளை மீறக் கூடியவர்களாகவும் ஆசிரியர்கள் அல்லது வழிகாட்டக் கூடியவர்களது அறிவுரைகளை பின்பற்றாதவர்களாகவும் இருப்பார்கள். இவர்களே அதிகமான பாடசாலைகளில் சிறந்த முறையில் கல்வி கற்கக் கூடிய ஏனைய மாணவர்களுக்கு இடையூராக செயற்படக் கூடியவர்களாவர். போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் எப்போதும் நல்ல விடயங்களில் நாட்டம் இல்லாதவர்களாகவும் , மன உழைச்சலுக்கு உள்ளாகியவர்களாகவும், எந்த நேரமும் தீய எண்ணங்களில் மூழ்கியவர்களாகவும், சமூக விரோத செயல்களில் ஈடுபடக்கூடியவர்களாகவும் இருக்கின்றனர். அத்துடன் இத்தகை யவர்களின் ஆரோக்கியம் படிப்படியாக மோசமடைந்து பல்வேறுபட்ட நோய்களுக்கும் உபாதைகளுக்கும் உள்ளாகி காலப்போக்கில் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் பலன் இல்லாதவர்களாக மாறுகின்றனர். இவர்களை கணப்படுத்த முடியாது.

ஆதனால் போதைப் பொருள் பாவனையில் இருந்து சமூகத்தை பாதுகாக்க அவசரமான நடவடிக்கைகள் தேவை. ஓவ்வொரு ஊரிலும் போதைப் பொருள் பாவனையை தடுக்க நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டும். ஊர் மஸ்ஜித்கள், சமூக நலம்புரி அமைப்புக்கள், தொண்டு நிறுவனங்கள் என்பன இவ்விடயத்தில் கூடுதலாக செயலாற்ற வேண்டி இருக்கின்றது. ஒருபுரம் போதைப் பொருளில் இருந்து பிள்ளைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதோடு போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகவும் கடுமையான எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். போதைப் பொருளை சமூகத்தில் அறிமுகம் செய்து விற்பனை செய்வதன் மூலம் எமது எதிர்கால சந்ததியினரை உயிரோடு அழித்துக்கொண்டிருக்கின்றனர். இவர்களே மிக மோசமான சமூக விரோதிகளாவர். கொடும் பாவிகளாவர். சுமூகத்திற் இருந்து போதைப் பொருள் வியாபாரிகள் ஒதுக்கப்பட வேண்டும்.

இது தொடர்பான அறிவூட்டல்கள் பாடசாலை மட்டத்தில் அதிகமாக திட்டமிட்ட அடிப்படையில் நடைபெற வேண்டும். அத்துடன் பள்ளிவாசல் நிர்வாக சபைகள் இவ்விடயம் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி இளைஞர்களைப் பாதுகாப்பதற்காக திட்டங்களை வகுத்து நடைமுறை ப்படுத்த வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் மஸ்ஜித் நிர்வாகங்கள் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பாக தொடர்ச்சியாக கவனம் செலுத்தும் வகையில் செயலாற்ற செயலணியொன்றை ஏற்படுத்த வேண்டியதும் அவசியமாகின்றது. சாதாரணமான ஒரு தனி மனிதனைவிட மஸ்ஜித் நிர்வாகங்களால் கூடுதலான தாக்கத்தையும் செல்வாக்கையும் செலுத்த முடிவது இதற்கு முக்கிய காரணமாகும். வயது வந்த குழந்தைகளை கண்காணிப்பது தொடர்பாக பெற்றோ ருக்கான அறிவூட்டல்கள்,

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் பல இடங்களில் பள்ளிவாசல்கள் முன்வந்து போதைப் பொருளுக்கு எதிராக பல நடவடிக்கைகளை எடுத்திருப்பது பாராட்டத்தக்கது. மாவன ல்லையிலும் இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனாலும் போதைப் பொருளுக்கு எதிராக நடவடிக்கைகளில் இறங்கும் போது அதில் ஈடுபடுபவர்களும் பல சவால்களை எதிர்நோக்குகின்றனர். கொலை அச்சுறுத்தல், தாக்குதல்களுக்கு முகம் கொடுத்தல், பெண்களை சம்பந்தப்படுத்தி பாலியல் குற்றச்சாட்டுக்களை பரப்புதல், குடும்பங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தல், மொட்டைக் கடிதங்கள் என்றெல்லாம் அச்சுறுத் தல்கள் வந்துகொண்டிருக்கின்றன. கடந்த வாரம் மாவனல்லையில் இவ்வாறான போதைப் பொருளுக்கு எதிராக செயற்படும், எழுதி வரும் எமது ஊடகவியலாளர் அமீர் ஹுசைனுக்கும் இவ்வாறான கொலை மிரட்டல் செய்யப்பட்டிருப்பதாக அவர் மாவனல்லை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த செயலை நாம் வன்மையாக கண்டிக் கின்றோம்.




# போதையில்... வேலியே பயிர்களை மேய்கிறதா?



நூருல் ஹுதா உமர்

யுத்தம், பேரிடர்கள், கொரோனா போன்ற அழிவுகளிலிருந்து மீண்ட இலங்கை தேசம் போதையில் மாட்டிக்கொண்டது. இது படிப்பறிவும், சிந்தனை ஆற்றலும் அதிகம் கொண்ட இலங்கையர்களின் மீது வேன்றுமென்றே கட்டவிழ்த்து விடப்பட்ட சதியா என்ற கேள்விகள் பலருக்கும் மனதில் தேங்கிக்கிடக்கும் இந்த காலகட்டத்தில் உச்சகட்ட தாக்குதலை போதை அரக்கர்கள் மேற்கொண்டு வருகின்றனர். சமூக நலனில் அக்கறை இல்லாத பணத்தாசை பிடித்த அரக்கர்கள் மட்டுமின்றி அரசாங்கத்தின் பிழையான கல்விக்கொள்கைகள் அல்லது அரசியல் சித்தாந்தங்கள் காரணமாக தொழிலில்லாத இளைஞர்கள் பலரும் வேறு வழியின்றி போதைப்பொருள் வியாபாரிகளாக மாறியுள்ளனர் என்ற கசப்பான உண்மை அதிர்ச்சி தரக்கூடியதாக அமைந்துள்ளது.

இப்போது போதைப்பொருள் பாவிக்கவிட்டால், சிகரெட் அடிக்கவிட்டால் சமூக அந்தஸ்த்தில் குறைந்தவர் போன்ற மாயை உருவாக்கப்பட்டிருப்பது இலங்கை எனும் அழகிய தீவின் எதிர்காலத்தின் மீது விழுந்த பெரும் அடியாகவே நோக்கவேண்டியிருக்கிறது. இந்த நிலைகளின் உச்சம் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், அறநெறி பாடசாலைகள் போன்ற இடங்களிலும் செல்வாக்கு செலுத்துகிறது.

இளைஞர்களை விரைவாக கவரக்கூடிய தென்னிந்திய சினிமாப் படங்களில் கதாநாயகர்கள் மட்டுமின்றி இப்போது கதையின் நாயகிகள் கூட போதைப் பாவனையை மேற்கொள்ளுவது போல் சித்தரிக்கின்ற காட்சிகள் மாணவர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்று தாமும் அதேபோல் போதைப் பாவனையை எடுத்துக் கொள்கின்றனர் என்கின்ற உண்மையை யாருக்கும் மறுக்க முடியாது. மட்டுமின்றி இலங்கையின் கல்வித்துறையில் உள்ள முரண்பாடான கொள்கைகள், பல சிரேஷ்ட நிலை பாடசாலை சூழலில் உள்ள ஒழுங்கீனங்களும், மாணவர்கள் இலகுவாக குறைந்த விலையில் கிடைக்கும் ஆபத்தான போதைப் பொருட்களை சிறு வயதில் நட்பு வட்டாரத்தின் மூலம் பழகி பின்பு அதற்கு நிரந்தர அடிமையாகின்றனர் என்கின்ற உண்மையை கசப்பாக இருந்தாலும் ஏற்றுக்கொண்டே தான் ஆகவேண்டியுள்ளது.

சில ஊடக நிறுவனங்களும், சில ஊடகவியலாளர்களும் பொழுது விடிந்தால் பாதுகாப்பு படையினருக்கு பதவியுயர்வை பெற்றுக்கொடுக்கும் புனித நோக்கில் சிறிய கைதுகளையும் பெரியளவில் திரிவுபடுத்தி பெரிய போதைப்பொருள் விற்பனை முதலைகளை சுதந்திரமாக உலாவ விட்டது இன்றைய சாபக்கேடாக நோக்கவேண்டியுள்ளது. நான்கு பக்கமும் கடனால் மட்டுமல்ல கடலாலும் சூழப்பட்டுள்ள இலங்கை தீவில் விழிப்பான கடற்படை இருக்கிறது, வான்படை இருக்கிறது, தரைப்படை இருக்கிறது, செயற்திறன் கொண்ட பொலிஸார், இராணுவத்தினர் இருக்கிறார்கள் ஆனாலும் இந்த போதைப்பொருட்கள் எப்படி இவ்வளவு பாரியளவில் இலங்கைக்குள் ஊடுருவியது. அல்லது இலங்கையில் தான் தயாரிக்கப்படுகின்றதா? அப்படியாயின் அந்த இடத்தை கண்டுபிடிக்க முடியாதுள்ளதா? என்கின்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் இலங்கை அரசியலமைப்பில் உள்ள குறைபாடுகளும், அதிகார வர்க்கத்தின் ஆணவமும், நாட்டை நேசிக்காத அரசியல்வாதிகளும், கடமை செய்ய மறுக்கும் அல்லது கடமையை துஸ்பிரயோகம் செய்யும் அரச அதிகாரிகளும் தான் காரணம் என்பது வெளிப்படை. நாட்டை நாசமாக்கும் பணியை செய்கின்றவர்கள் கையில் அதிகார சாவி கொடுக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் இப்போது நாட்டில் தலைதூக்கியுள்ள போதைப்பொருள் பாவனை உயர்வின் மூலம் எழுந்துள்ளது.

பிள்ளைகளின் செயற்பாடுகள் தொடர்பில் பெற்றோர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டுமென தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் அண்மையில் பகிரங்க வேண்டுகோளொன்றை விடுத்திருந்தார். இதில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மட்டுமின்றி மதபோதகர்களும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இன்றைய சூழ்நிலையில் பிள்ளைகள் தொடர்புகொள்ளும் நபர்கள், செல்லும் இடங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியது பெரியோரின் கடமைகளில் ஒன்றாக மாறியிருக்கிறது. பாடசாலைகளில், தனியார் கல்வி நிலையங்களில், சீர்திருத்த பள்ளிகளில், சிறைக்கூடங்களில் கூட போதைப்பொருள் இப்போது சர்வசாதாரணமாக நடமாடுகின்றது என்பது கவலையான விடயமாக அமைந்துள்ளது.

முன்னர் இருந்த அளவை விட இப்போது புகையிலை பாவனைகளும் நாட்டில் அதிகரித்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கிறது. போதைப்பொருள் பாவனையை ஊக்குவித்து நாட்டின் எதிர்காலத்தை சீரழிக்க முனைவோர் ஐஸ் போன்ற போதைப்பொருட்களை பயன்படுத்தும் போது, விழித்திருக்க முடியுமென்ற தவறான தகவல்களை பரப்புவதாக தெரிவிக்கப்பட்ட விடயங்களை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் தலைவரும் உறுதிப்படுத்தியுள்ளார். அத்துடன் எவ்வாறாயினும், இந்த போதைப்பொருள் பாவனையால் உறக்கம் சார்ந்த பிரச்சினை ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளித்தல், சமூகமயப்படுத்தல் மற்றும் தொழில்ரீதியான ஆற்றல்களை மேம்படுத்துதல் என்பவை இப்போது அவசியமாகிறது. ஹெரொயின், கஞ்சா, கேரள கஞ்சா, மதுபானம் மற்றும் போதை குழுசைகளை பயன்படுத்துதல் என்பவற்றின் காரணமாக வாழ்க்கையை இருளாக்கிக்கொண்ட போதைப்பொருள் பாவனையாளர்களுக்கு மனநிலை சிகிச்சை, உளவளத்துணை ஆலோசனை மற்றும் மருத்துவவியல் அணுகுமுறை என்பவற்றின் ஊடாக புனர்வாழ்வளிக்கப்படுகிறது. அக்காலப் பகுதியில் பயிலுநர்களின் ஆன்மீக அபிவிருத்திக்கு யோக தியானம் மற்றும் மத நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவை நடத்தப்படுகின்றன. பயிலுநர்கள் புனர்வாழ்வு பெறுகின்ற காலத்தில் வதிவிட வசதிகள், உணவு, மருத்துவ வசதிகள் என்பவை இலவசமாக வழங்கப்படுகின்றன. பயிலுநர்களின் சீவனோபாய மார்க்கத்தை அபிவிருத்தி செய்வதற்காகத் தேவைப்படுகின்ற தொழில்ரீதியான ஆற்றலை அபிவிருத்திசெய்யும் பயிற்சியும் தங்கியிருக்கும் காலத்தில் வழங்கப்படுகின்றது. போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை இப்படியான இடங்களுக்கு அனுப்புவதன் மூலம் நன்மை கிடைக்கும் என்று பலரும் கூறினாலும் அது எவ்வளவு தூரம் உண்மை என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

போதைப்பொருள் பாவனை தொடர்பிலும், வியாபாரம் தொடர்பிலும் ஒப்பிட்டு பார்க்கும் போது சிறுபான்மை சமூகம் பெரும்பான்மை சமூகத்தை விட குறைவாகவே இருக்கிறது. ஆனால் ஊடகங்களில் அது தலைகீழாக காட்டப்படுவதும், குறித்த ஒரு சமூகத்தை தீவிரவாதிகளாக மக்கள் முன்னால் காட்டிக்கொண்டிருந்த ஒளி, ஒலி, ஊடகங்களும் பத்திரிகைகளும், சினிமாவும் இப்போது அந்த சமூகத்தை போதைப்பொருள் வியாபாரிகளாகவும், பாவனையாளர்களாகவும் காட்டிவருவதை யாராலும் மூடிமறைக்க முடியாது. குறித்த சமூகத்தில் உள்ள சில கோடாரிக்காம்புகளையும், உசார் மடையர்களையும், இன்னும் சில தேவைக்காக அலைபவர்களையும் இந்த பெரும் சக்திகள் சரியாக பயன்படுத்தி குறித்த சமூகத்தின் முகத்தை தொடர்ந்தும் கரியை பூசி வருகின்றது. இலங்கை போதைப்பொருள் ஒழிப்புக்கு பொறுப்பானவர்களின் அறிக்கைகளில் இதன் உண்மைத்தன்மையை நாங்கள் அறிந்து கொள்ள முடியும்.

போதை என்பது தன்னிலை, தனது கௌரவம், குடும்ப கௌரவம், பதவி பட்டங்கள் என சகலதையும் மறக்கச் செய்து உடல்-உள பாதிப்புக்களை ஏற்படுத்த வல்லது. இது தனிமனிதனை மட்டும் பாதிக்கும் பழக்கம் அல்ல. இதனால் அவரைச் சுற்றியுள்ள சமுதாயமும், சமூகமும், நாடும், உலகமும் பாதிப்படைகிறது. போதைப் பொருள் பழக்கமானது இன்று உலகில் சமூக, சுகாதார மற்றும் பொருளாதாரப் பிரச்சினையாக மட்டுமின்றி கொடிய புற்றுநோய் போன்று மாறியுள்ளது. போதைப்பொருள் பாவனை மற்றும் கடத்தல் செயற்பாடுகளை ஒழிக்க அதிக நாடுகள் முயற்சித்தும் இவை குறைந்தபாடில்லை. இன்றைய நாட்களில் போதைப்பொருளின் தாக்கம் மாணவர்களிடமும், நாளைய தலைவர்களான இளைஞர், யுவதிகளிடமும் அதிகரித்து கொண்டே செல்கின்றது. போதைப்பொருள் கடத்தல் தரை,கடல்,வான் மார்க்கமாக நடைபெறுகின்றது. இதனால் அதிக பணத்தை இதில் ஈடுபடுபவர்களும் பெற்று வருகின்றனர். ஆனால் பாதுகாப்பு படையினருக்கு தெரியாமல் எப்படி இது இலங்கைக்குள் வருகின்றது என்பதே புரியாத புதிராக உள்ளது. இதன் பின்னணி மிகவும் ஆபத்தானதும், அதிகாரம் நிறைந்ததும் என்பதும் யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

போதைப்பொருள் கடத்தலில் இலங்கை கேந்திர ஸ்தானமாக விளங்கியதாக முன்னர் குற்றச்சாட்டொன்று நிலவியது. அதிக அளவிலான போதைப்பொருட்கள் இலங்கைக்கு அண்மைய நாடுகளில் இருந்து கொண்டு வரப்படுவதாகவும் திறந்த பொருளாதாரக் கொள்கை, உல்லாசப் பயணிகளின் வருகை போன்ற காரணிகளால் போதைப்பொருள்கள் நாட்டுக்குள் பிரவேசிப்பதாகவும் ஆபத்தான போதைப் பொருட்களை கடத்தும் அதிகார சபையின் அறிக்கை ஒன்று தெரிவித்த விடயம் இங்கு அடிக்கோடிட்டு காட்டவேண்டியுள்ளது. கைது செய்யப்படுபவர்களில் 60 வீதமானோர் 30 வயதிற்கு மேற்பட்டவர்கள் என்பதும் 39 வீதமானோர் 20 வயதை நெருங்கியவராவர்கள் என்பதும் அதிலும் குறிப்பாக பெண்களும் ஈடுபடுகிறார்கள் என்பதும் ஐஸ் மற்றும் ஹெரோயின், கேரளா கஞ்சா போன்ற போதைப்பொருள்கள் அதிகமாக கைப்பற்றப்பட்டுள்ளன என்ற தகவலும் கவனிக்கப்பட வேண்டியது.

இலங்கையில் இடம்பெறும் குற்றச் செயல்களில் அரைவாசிக்கு அண்மித்த குற்றச்செயல்கள் போதைப்பொருள் பாவனையால் ஏற்படுகின்றன. நாட்டில் நடந்த வாகன விபத்துகளில் அதிகமானவை போதைப்பொருள் பாவனையால் இடம்பெற்றவை. அதில் 90 சதவீதமானவை போதைப்பொருள் பாவனையால் நடந்துள்ளன. மட்டுமின்றி திருட்டு, கொலை, கொள்ளை போன்ற குற்றச்செயல்களுக்கு போதைப்பொருள் பாவனை பிரதான காரணியாக விளங்குகின்றது. போதைப்பொருள் பாவனையில் எந்த மாகாணம் முதலிடம் பெறுவது என்ற போட்டியே இப்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. ஒன்றுக்கு ஒன்று போட்டி போட்டுக் கொண்டு போதைப்பொருள் பாவனையை எதிர்கொண்டு வருகிறது. அதிலும் குறிப்பாக யுத்தமுடிவுக்கு பின்னர் வடக்கிலும் கிழக்கிலும் போதைப்பொருள் பாவனை அதிகரித்திருக்கிறது. விடுதலைப்புலிகளும், இலங்கை இராணுவமும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த குறித்த பிரதேசங்களின் இப்போதைய நிலை படுமோசமாக உள்ளது.

# பிரித்தானிய முன்னாள் பிரதமர் டேவிட் கெமரன் ஜனாதிபதியுடன் சந்திப்பு!





தனிப்பட்ட விஜயமாக இலங்கை வந்துள்ள பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டேவிட் கெமரன் இன்று (02) முற்பகல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார்.

ஜனாதிபதியுடன் சிநேகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட்ட கெமரன், ஜனாதிபதிக்கு புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# நல்லாட்சிக்கான தேசிய முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி சந்திப்பு!



எதிர்வரும் தேர்தல்களில் எவ்வாறான நகர்வுகளை மேற்கொள்வது என்பது குறித்து, நல்லாட்சிக்கான தேசிய முன்னணிக்கும் (NFGG) ஐக்கிய மக்கள் சக்திக்குமடையிலான (SJB) முதற்கட்டப் பேச்சுவார்த்தை நேற்று வியாழக்கிழமை ஞதுஉ அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆீ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் றஹ்மான் ஆகியோரும், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி சார்பாக அதன் பிரதித் தவிசாளர் பொறியியலாளர் அப்துர் றஹ்மான், தேசிய அமைப்பாளர் முஜீபுர் றஹ்மான், தலைமைத்துவ சபை உறுப்பினர் எம்.ஜே.எம். மன்ஸ/ர் (முன்னாள் அதிபர்) ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, உள்ளூராட்சி மன்றங்களில் நாடளாவிய ரீதியில் அங்கம் வகிக்கும் ஔபுபு உறுப்பினர்களின் அரசியல் செயற்பாடுகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

எந்தெந்தப் பிரதேசங்களில் எவ்வகையான தேர்தல் நகர்வுகளை முன்னெடுத்தல். தற்போதைய வட்டாரப் பிரிப்பு முறையில் தேர்தல் நடைபெற்றால் அதனை எதிர் கொள்வதற்கான சிறந்த வழிமுறைகள் என்ன என்ன? விகிதாசார முறையில் தேர்தல் நடைபெற்றால் அதன் நகர்வுகள் எவ்வாறு இருக்கும் என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பான விரிவான அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை அடுத்துவரும் ஒருசில தினங்களில் நடைபெறும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# தர்கா நகரில் புத்தக கண்காட்சியும், விற்பனையும்







(பீ.எம்.முக்தார்)

தர்கா நகர் மர்ஹபா வரவேற்பு மண்டபத்தில் புத்தக கண்காட்சியும் விற்பனையும் சிறப்பாக இடம் பெற்றது.

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிமின் ஆலோசனைக்கமைய இக்கண்காட்சி இடம்பெற்றதோடு பாடசாலை மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்களும் மலிவான விலையில் விற்பனை செய்யப்பட்டது.

பாடசாலை சிறார்களின் ஆற்றல்களை வளர்க்கும் விதத்தில் கலை,கல்வி,சித்திரம் போன்ற போட்டி நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.

தர்கா நகர் லோடஸ் வீதியில் உள்ள மர்ஹபா வரவேற்பு மண்டபத்தை நோக்கி பிரதேசவாசிகள் காலை முதல் இரவு வரை படையெடுத்து இக்கண்காட்சியை பார்வையிட்டதோடு பெறுமதியான நூல்களையும் கொள்வனவு செய்தனர்.

கண்காட்சி அங்குரார்ப்பண நிகழ்வில் பன்னூலாசிரியர் ஹாபிஸ் இஸ்ஸதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர ஆஸ்பத்திரி வைத்தியர் ரஹ்மத்துல்லாஹ் நஜீப்,பிரபல சமூக சேவையாளர் அப்துல் காதர்,வர்த்தகர் எம்.லியாஸ் ஹாஜியார்,முகத்தமுஷ் ஷாதுலி முஹம்மத் /ஹஸைன்,துன்துவை முஸ்லிம் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் ஏ.எச்.எம்.ஸம்ஸ தீன்,நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய பணிப்பாளர் ஏ.ஜே.எம்.அக்பர் உட்பட பலரும் பங்குபற்றினர்.

வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி பிரதம அதிதி ஹாபிஸ் இஸ்ஸதீன் விசேட உரையாற்றினார்.

தர்கா நகரில் இவ்வாறான நூல் விற்பனை கண்காட்சியை ஏற்பாடு செய்த மர்ஹபா மண்டப நிர்வாகிகளை அவர் பாராட்டினார்.

பாடசாலை,பாலர் பாடசாலை அதிபர்கள்,ஆசிரியர்கள்,மாணவர்கள் என பலரும் பங்குபற்றினர்.

# ஜே.எஸ்.கே,ஏ,ஏ,எச். மௌலானா எழுதிய "உமர் ரலி புராணம்" நூல் சென்னையில் வெளியீடு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)



ஈழம் தந்த தீந்தமிழ்ப் புலவரும், முத்தமிழ் அறிஞரும், சூஃபி ஞானியுமாகிய அல் ஆரிஃபு பில்லாஹ் இமாம் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் அல் ஹாஷிமிய் மௌலானா (ஜே.எஸ்.கே,ஏ,ஏ,எச். மௌலானா) எழுதிய "உமர் ரலி புராணம்" எனும் நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு சென்னை, எழும்பூர், இலக்கம் 2ஏ, பொன்னியம்மன் கோயில் வீதியில் உள்ள ரமதா ஹோட்டலில் இடம்பெறும்.

ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில், பெரும்கவிக்கோ, கலைமாமணி, முனைவர் வ.மு. சேதுராமன் MA.. PhD. தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு இந்தியா யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் முனீருல் மில்லத் பேராசிரியர் காதர் முஹியத்தீன், சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் கே.எஸ். மஸ்தான், தமிழ்நாடு படத்திட்ட கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, முனைவர் அஃப்ளளுல் உலமா ஷெய்கு அப்துல்லாஹ் ஜமாலி MA,PhD தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் உட்பட தமிழ் அறிஞர்கள் , மார்க்க அறிஞர்கள், சமுதாயத் தலைவர்கள் , பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலரும் இவ்விழாவில் சிறப்புரையாற்றவுள்ளனர்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியச் சோலையில் சீறாப்புராண மரபில் மலர்ந்திருக்கிறது உமர் ரலி புராணம். காப்பிய இலக்கணம் காவிய அலங்காரங்களுடன் செந்தமிழ் நடையில் 21ஆம் நூற்றாண்டில் எழுந்த இவ்வரிய புராணத்திற்கு சென்னையில் வெளியீட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நபிகள் நாயகத்தின் அருமைத் தோழரும் இஸ்லாமிய பேரரசின் இரண்டாவது கலீஃபாவுமாகிய உமர் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்களின் வாழ்க்கை வரலாற்றை மூன்று காண்டங்களாக வகுத்து அதன் முதலாவது உதய காண்டம் தற்போது வெளிவந்துள்ளது. 21 படலங்களையும் 682 செய்யுள்களையும் அதற்கான கொண்டுக்கூட்டு, பொருள், குறிப்பு என முழுமையான விளக்கத்தை உள்ளடக்கியதாக இவ் அரும்பெரும் காவியம் வெளியிடப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வை www.youtube.com/emsmedia என்ற யூடியூப் தளம் மூலம் அனைவரும் நேரடியாகப் பார்வை இடலாம்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# திரைநேரமும் உறக்கமும்

## திரை நேரம் என்றால் என்ன?

"திரை நேரம்" என்பது டிவி பார்ப்பது, கணினியில் வேலை செய்வது, ஸ்மார்ட் போன்கள் பயன்படுத்துவது, வீடியோ கேம் விளையாடுவது போன்ற திரையின் முன் செய்யப்படும் செயல்களுக்குப் பயன்படுத்தப்படும் சொல்லாகும். இதை ஆங்கிலத்தில் "ளுஉசநநெ வுஐஅந" என்கிறோம்.

"ஸ்க்ரீன் டைம்" என்பது ஒரு உட்கார்ந்த செயல்பாடாகும். அதாவது நாங்கள் உட்கார்ந்திருக்கும் போது உடல் ரீதியாக செயலற்ற நிலையில் இருக்கிறோம் என்பதே இதன் கருத்தாகும். திரை நேரத்தில் மிகக் குறைந்த உடல் ஆற்றல் பயன்படுத்தப்படுகிறது.

நரம்பியல் மற்றும் தூக்க மருந்தியல் நிபுணருமான ஜோனா ஏ கூப்பர் திரை நேரம் பற்றிய தனது ஆய்வுரீதியான தகவல்கலை இப்படி கூறுகிறார்...

பிரகாசமான திரைகள் நம்மை விழித்திருக்கச் செய்ய நமது மூளையின் பகுதிகளை தூண்டுகின்றன.

தூங்க முன் பிரகாசமாக ஒளிரும் திரையைப் பார்ப்பது இரவை அமைதியற்றதாக ஆக்கிவிடும்.

"எமது தூக்க நேரமும் விழித்திருக்கும் நேரமும் மூளையின் இரண்டு பகுதிகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. ஒன்று ஒளிக்கு அதிக உணர்திறனடைந்து விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது,

மற்றொன்று மாலையில் ஒளி மங்கும்போது பினியல் சுரப்பி என்று அழைக்கப்படும் ஒரு வித சுரப்பி மெலடோனின் எனும் தூக்க ஹோமோனை சுரக்க வைக்கிறது," என்று டாக்டர் கூப்பர் கூறுகிறார்.

திரைகள் பெரும்பாலும் நீல ஒளியை உருவாக்குகின்றன. இது நமது தூக்க சுழற்சியில் மிகவும் உற்சாகமாக உள்ள ஒளி நிறமாலையின் பகுதியாகும். இந்த பகுதியின் தூண்டுதல் மூலையின் மெலடோனின் உற்பத்தியை அடக்குகிறது, இதனால் பலர் தங்கள் மூளையை "அமைதியாக்கி" தூங்குவதற்கு தயார்படுத்துவதில் சிரமப்படுகிறார்கள்.

"நாம் திரையில் சில இனிமையான செயல்களில் ஈடுபட்டிருந்தாலும், திரைகளில் இருந்து வரும் வெளிச்சம் நாம் தூக்கத்திற்கு மாறுவதை தாமதப்படுத்தலாம்" என்று டாக்டர் கூப்பர் கூறுகிறார்.

"ஆனால், நாம் இரவின் ஆரம்ப நேரத்தில் அனுப்பும் குறுஞ்செய்திகள், அல்லது வாட்ஸ்அப் தகவல்கள், நாம் பார்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அல்லது வீடியோ கேம்கள் அனைத்தும் தம்மை தாமே தூண்டிக்கொண்டு, மூளையை சுறுசுறுப்பாக்குவதுடன் சில சமயம் காயப்படுத்திக் கொள்கின்றன, மேலும் அமைதிக்கு பதிலாக அட்ரினலின் எனும் ஒவ்வாத சுரப்பியின் உற்பத்தியை விரைவாக்குகிறது.

போதுமான தூக்கம் கிடைக்காமை, முறையற்ற தூக்கத்தின் என்பன இதய நோய், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், மன அழுத்தம் மற்றும் உடல் பருமன் போன்ற பிற உடல்நலப் பிரச்சினைகளுடன் தொடர்புபட்டுள்ளது என்று டாக்டர் கூப்பர் கூறுகிறார்.

தொடர்ந்து தூக்க மின்மையானது அதிக பகல் நேர துக்கம், கவனம் செலுத்தும் திறன் குறைதல், அன்றாட பணிகளைச் செய்வதில் சிரமம் போன்றன ஏற்பட வழிவகுக்கின்றன. இந்த பாதகமான பக்க விளைவுகளை யாரும் விரும்பவில்லை. ஆதலால் உடல்நலத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதும் உடல் ஆரோக்கியம் பேணுவதற்கு திட்டமிடுவதும் மிகவும் முக்கியமானது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இரவுக்கு முன்பான மாலை நேரத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மணிநேர திரை நேரம் தூக்கத்திற்குத் தேவையான மெலடோனின் எழுச்சியைத் தீவிரமாக சீர்குலைக்கும் என்று ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

அனைத்து மின்னணு சாதனங்களையும் தூங்குவதற்கு குறைந்தபட்சம் ஒரு மணி நேரத்திற்கு முன் அணைத்துவிடுவது மிகவும் நல்லது. அதற்கு பதிலாக ஒரு புத்தகத்தைப் படிக்கலாம். தியானம் செய்யலாம். அடுத்த நாளுக்கான திட்டங்களை வரையலாம். பிடித்த நிதானமான செயல்களைச் செய்யலாம்.

அதேநேரம் பிள்ளைகளுக்கான திரை நேரத்தைக் கட்டுப்படுத்துவது அவர்களின் ஆரோக்கியமான தூக்கத்திற்கு இன்றியமையாதது. பிள்ளைகள் மற்றும் பதின்வயதினர்களின் படுக்கையறைகளில் இருந்து மின்னணு சாதனங்களை வெளியே வைத்திருக்க ஏற்பாடு செய்யுமாறு அமெரிக்க பிள்ளைநல மருத்துவ நிறுவனம் பரிந்துரைக்கிறது.

எமது தூக்கம் மிகச் சிறந்த அருள். அது உடலையும் உள்ளத்தையும் அமைதிப்படுத்தும் அருமருந்து. அருள் வீணடிப்பதற்கு தரப்பட்டதல்ல. வாழ்க்கை வளமாக்க தரப்பட்டது.





மலேசியா நாட்டின் புதிய தூதரக அலுவலகம் கொழும்பு பான்ஸ் பிலேஸில் 02.01.2023 மலேசிலியா நாட்டிலிருந்து வருகை தந்த மலாக்கா ஆளுனர் தத்டோ டொக்டர், மொஹமட் அலி மொஹமட் ரஸ்டானினால் திறந்து வைக்கப்பட்டது. மலேசியா நாட்டின் இலங்கைக்கான தூதுவர் தத்தோ டான் யங் தாய் அருகில் நிற்பதனையும். மலே சமுகத்தினை இணைப்பாளர் அன்வர் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஜெமீல் இந்தோனியா நாட்டின் தூதுவரும் அருகில் காணப்படுகின்றனர். அதே வேளையில் மலே சமுகமத்தவர்கள் சந்திப்பும் ஜெயிக்கா ஹில்டனில் நடைபெற்றது. அதில் அதிதியாக சுற்றாடல்துறை அமைச்சர் நசீர் அஹமடும் கலந்து கொண்டு முன்னாள் அமைச்சர் முதலமைச்சர் தற்போதைய மலாக்கா ஆளுனர் வரவேற்பதையும் படத்தில் காணலாம்.

(அஷ்ரப் ஏ சமத்)

# கொழும்பு அமேசான் கல்லூரியின் வருடாந்த பட்டமளிப்பு விழா





கொழும்பு அமேசான் கல்லூரியின் வருடாந்த பட்டமளிப்பு விழா பண்டார்நாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் கடந்த 29ஆம் திகதி நடைபெற்றது.

கல்லூரியின் தலைவர் இல்ஹாம் மரிக்கார் தலைமையில் நடைபெற்ற இந்த பட்டமளிப்பு விழாவில், 250 பட்டதாரிகள் பல்வேறு துறைகளிலும் பட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

களனிப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மொழியியல் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.டி.யோகராஜா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பட்டங்களை வழங்கி வைத்தார்.

பல வெளிநாடுகளின் பல்கலைக்கழகப் பிரதிநிதிகளும் உள்ளூர் பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பட்டங்களை வழங்கினார்.

இலங்கையில் பல்கலைக்கழக மாநில குழுவின் அங்கீகாரம் பெற்ற இக்கல்லூரி, கடந்த பல வருடங்களாக நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியா மாவட்ட பொது வைத்திசாலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் பிரிவு ஆரம்பிப்பு!




நுவரெலியா மாவட்ட பொது வைத்திசாலையில் அமைக்கப்பட்டிருந்த கட்டணம் செலுத்தும் வார்ட் (PAYING WARD) உத்தியோக பூர்வமாக திங்கட்கிழமை (2) நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளரும் விசேட வைத்திய நிபுணருமான மகேந்திர செனிவிரட்னவினால் திறந்து வைக்ககப்பட்டது. இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை விஷேட வைத்திய நிபுணர் ரவி திஸாநாயக்க மற்றும் வைத்தியர்கள், வைத்தியசாலை அதிகாரிகள், வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் என பலரும் கலந்துக்கொண்டனர்.

# மனிதாபிமான மற்றும் மேம்பாட்டு உதவிகள் வழங்கும் நாடுகள் பட்டியலில் சவுதி அரேபியா முதலிடம்



பாரிஸை தளமாகக் கொண்ட, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பின் (OECD) வளர்ச்சிக்கான உதவிக் குழு, 2021 ஆம் ஆண்டில் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் வளர்ச்சிக்கான உத்தியோகபூர்வ உதவிகளை (மனிதாபிமான மற்றும் மேம்பாடு) வழங்கும் நாடுகளில் சவூதி அரேபியா 7.12 பில்லியன் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கி முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது.

இவ் உதவித் தொகையானது சவூதி அரேபியாவின் மொத்த தேசிய வருமானத்தில் 1.05% ஆகும். மேலும் இத்தொகை, உதவி வழங்கும் நாடுகள் தங்களது மொத்த தேசிய வருமானத்தில் 0.7மூ என்ற தொகையை மேற்குறிப்பிட்ட நாடுகளின் வளர்ச்சிக்காக உத்தியோகபூர்வ உதவியாக ஒதுக்க வேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் சபையால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விடவும் அதிகமாகும்.

இரு புனிதத் தளங்களின் பாதுகாவலர், மன்னர் சல்மான் பின் அப்துல் அசிஸ் அல் சவூத், மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதமருமாகிய இளவரசர் முஹம்மது பின் சல்மான் பின் அப்துல் அசிஸ், ஆகியோரின் வழிகாட்டல்கள், அனைத்து தகுதியுடனும் உரிமையுடனும் சர்வதேச மனிதாபிமான நடவடிக்கைகளில் சவூதி அரேபியாவை முன்னணியில் வைத்திருக்கும் இம்மாபெரும் சாதனைக்கு பங்களிப்புச்செய்துள்ளது.

அவ்வாறே சவூதி அரேபியா அதன் வரலாறு நெடுகிலும், கஷ்டத்தில் வாடுபவர்களுக்கு உதவுவதற்கும், அவ்வாறானவர்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் நன்நோக்குடன் உதவிக் கரம் நீட்டும் ஒரு கருணையுள்ள நாடாக தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறது. மேலும் புத்திசாதுர்யமும் தூரநோக்கும் கொண்ட அந்நாட்டின் தலையமைகள், தாராள மனப்பான்மை கொண்ட அந்நாட்டு மக்களின் நிலையான உயர் பெறுமானங்களைப் பிரதிபலிக்கும் அதே உன்னத அணுகுமுறையில் இந்நடவடிக்கைகள் மேலும் தொடர்கிறது. மேலும் விதிவிலக்கான மற்றும் தொடர்ச்சியான சாதனைகள் சவூதி அரேபியாவின் "விஷன் 2030" எனப்படும் மூலோபாயநோக்கின் விளைவாகவே கருதப்படுகிறது.

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (OECD), 2021 ஆம் ஆண்டிற்கான தரவுகளின்படி, மேற்படி குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் மனிதாபிமான நடவடிக்கைகள், உணவுப் பாதுகாப்பு, தங்குமிடம், கல்வி, நீர், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம் போன்ற மிக முக்கிய துறைகளுக்கு சவூதி அரேபியாவின் இவ் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.



சமூக சேவைக்கான கௌரவ டாகடர் பட்டம் புதுடெல்லியில் இந்தியாவின் தலைசிறந்த நூறு பேருக்கு அண்மையில் வழங்கப்பட்டது இதில் ஊடகவியலாளரும், சமூக சேவகரும், சாயி தர்மா ட்ரஸ்ட் ஸ்தாபகருமான இலங்கை மானிப்பாயைச் சேர்ந்த தர்மசீலன் செந்தூரனுக்கு சௌத் அமெரிக்கன் யூனிவர்சிட்டி கொன்சுலர் மற்றும் இந்திய பாராளுமன்ற டெல்லி சட்டசபை உறுப்பினர்கள் வழங்கிய போது...

## மாத்தளை சாந்த தோமஸ் கல்லூரிக்கு மலசலகூட வசதியுடன் குடிநீருக்கான கிணறும்





மாத்தளை சாந்த தோமஸ் கல்லூரியின் 150வது வருட பூர்த்தியையொட்டி இப் பாடசாலையின் 1972 ன் மாணவர்க்குழுவின் கோரிக்கைக்கமைய மாத்தளையைச்சேர்ந்த தொழிலதிபர் எம். இஸ்மயில் (ரஹீமிய்யா) கண்டி வத்தேகம ஹூரீகடுவ சிங்கள பாடசாலைக்கு நீண்டகால தேவையாக இருந்துவந்த மலசலகூடவசதியுடன் குடிநீருக்கான நீரிறைக்கும் இயந்திரத்துடன்கூடிய கிணறுவசதியையும் தமது சொந்த நிதிசெலவுகளில் அமைத்துக்கொடுத்து அதற்கான உறுதிபத்திரத்தை இப்பாடசாலை அதிபர் திருமதி மங்கலிக்கா ரஜ சிங்க விடம் தொழிலதிபர் கையளிப்பதையும் இந்நிகழ்வில் மாத்தளை மாவட்ட மனித உரிமைச்சங்க அத்தியட்சகர் கலாநிதி எம்.அப்துல் அஸீஸ் மற்றும் பாடசாலை அதிபர்சகிதம் பிரமுகர்கள் கலந்துகொண்டிருப்பதையும் படங்களில் படங்களில் காணலாம்.



மாவனல்லை ஒவத்தை மஸ்ஜிதுல் தீனிய்யாவில் ,இலவச கண் பரிசோதனை முகாம் ஒன்று எம். எச். எம். முஸம்மில் ஜே.பி தலைமையில் அண்மையில் நடைப்பெற்றது. சுமார் நூற்று ஐம்பது பேர் இன மதம் பார்க்காமல் இதில் கலந்து பயன் பெற்றனர் .கேகாலை வைத்தியசாலையின் ஒத்துழைப்போடு நடைபெற்ற இவ் நிகழ்வில் ஊர் மக்கள் ஒத்துழைத்ததையும் படங்களில் காணலாம்.

(அரநாயக்க - பாரா தாஹீர்)



சுஐப் எம்.காசிம்

# இந்த தேர்தலா இவ்வளவு முக்கியமாகிறது!



நாட்டின் அரசியல் நிலவரங்கள் தேர்தலொன்றுக்கு தயாராகி வருவதையே புலப்படுத்துகிறது.

புதுவருடத்தில் (2023) ஏதாவதொரு தேர்தலை எதிர்கொண்டேயாக வேண்டும். இவ்வாறு எதிர்கொள்ள நேரும் தேர்தலில் எவ்வாறு நடந்துகொள்வது? இதுதான் கட்சிகளுக்குள்ள சிக்கல். பொருளாதாரம் அடியோடு வீழ்ந்துள்ள நிலையில், வாக்களிக்கும் விருப்புக்கள் மக்களிடம் இருக்குமா?

இதனால் விருப்புக்களை ஏற்படுத்தும் வியூகங்கள், பிரச்சாரங்களையே கட்சிகள் சிந்திக்கின்றன. ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலில் வகுக்கும் வியூகங்கள் உள்ளூராட்சித் தேர்தலுக்கு உதவுமா? இல்லை ஊர்ப் பிரச்சினையை உசுப்பேற்றுவதா? உள்ளூராட்சித் தேர்தலுக்கான களச் சாத்தியங்கள் தென்படுவதால், சுயேச்சைக் குழுக்கள் கூட உஷாரடையும் சூழலிது.

சமூகம், உரிமை மற்றும் இருப்பு உள்ளிட்டவற்றுக்கு முக்கியத்துவமளிக்கும் தேர்தலில்லை உள்ளூராட்சி. பாரிய கூட்டணிகள் அமைத்து எதிரிகளை வீழ்த்துமளவுக்கு முக்கியமானதும் இல்லைதான் இத்தேர்தல். இந்தளவு இலட்சணமுள்ள இத்தேர்தலைத்தான் நடத்துமாறு எதிரணிகளும், இதற்கேற்ற சூழலில்லை என அரச அணிகளும் அடம்பிடிக்கின்றன.

உள்ளூராட்சி தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடுமாறு, எதிரணிகள் வழக்கும் தாக்கல் செய்துள்ளது. ஜனவரி 18 இல்தான் இந்த வழக்கு விசாரிக்கப்பட உள்ளது. மற்றும் பணவீக்கம் எனக் கூறப்படும் வியாக்கியானங்களுக்கு ஏற்கனவே ஒதுக்கிய நிதி உள்ளதாக புஞ்சிஹேவா பதிலளித்திருக்கிறார். மார்ச் 10க்கு முன்னர் தேர்தல், 20க்குள் வெற்றியீட்டியோர் விபரம் என்றும் அறிவித்துவிட்டார் புஞ்சிஹேவா. இவ்வளவும் நடந்தும் சிலருக்கு சந்தேகம். பலவீனமான நேரத்தில் பந்தயத்துக்கு துணியுமா அரசு. மலையேறுவது போன்ற ஒரு பலப்பரீட்சைதான் இது. சறுக்கினால் சவக்குழி. சாதித்தால் வெற்றிக்கொடி. எல்லாத் தரப்புக்கும் இதுதான் நிலை. ஆனாலும், எதிரணிகள் எதைப்பற்றியும் சிந்திப்பதாயில்லை. ஏறினாலே முஸ்லிம் தலைமைகள் என்ன செய்யும்? பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று முஸ்லிம் தலைமைகள் உள்ளன. எதைச் சொல்லி முஸ்லிம்களை இத்தலைமைகள் ஒன்றுசேர்க்கும்.

தெவட்டக்கஹ பள்ளிவாசலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நல்லாசி வேண்டி பிரார்த்தனை நடந்த பின்னணியோடு, தென்னிலங்கை முஸ்லிம்களின் தேடலும் தெரிவும் பெரிதாக மாற்றமுறாது. வடக்கு, கிழக்கு மாகாண முஸ்லிம்களும் பட்டதெல்லாம் போதும், தொட்டதையே தொடர்வோம் தாய், பிள்ளைச் சண்டைகள் தண்ணீரில் எழுத்து என்பார்களே! இதுவோ, கல்லறைச் சுவரில் எழுதிய கல்வெட்டுக்களாக உள்ளதே! எதுவானாலும் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறுமானால், இந்தப்

இதனால், எதை எதிர்வு கூறுவதெனத் தெரியாத குழப்பமே சில வாரங்களாக விஸ்வரூபம் எடுக்கிறது. 21 ஆவது திருத்தம் நிறைவேறி ஆணைக்குழுக்களிடம் அதிகாரம் வந்துள்ளதால், புஞ்சிஹேவாவின் அறிக்கைகளை வைத்துத்தான் அதிக ஆரூடங்கள் வெளியாகின்றன.

நிதியில்லை, நேரமில்லை வெற்றிப்படிதான் எனக்குதிக்கிறது.

கட்சிகளின் உட்கட்டமைப்புக்களைப் பரீட்சிக்கும் தேர்தலாக இது இருக்கப் போவதுமில்லை. ஆட்சிக்கு ஆரூடம் கூறப்போகும் தேர்தலாகவே நடக்கப் போகும் தேர்தல் இருக்கும். ஒருவேளை அதிகமாக எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சி தேர்தலாக இருந்தால் என்றெண்ணுகின்றனர். பெரும்பான்மைச் சமூகத்துடன் பொருந்திப்போக முயலுமளவுக்கு, தமிழ் சமூகத்துடன் புரிந்துபோகும் போக்குகள் முஸ்லிம்களிடம் குறைவு தான். காரணம் களச் சண்டைகளா?

வடக்கு, கிழக்கில் ஒரே மொழியைப் பேசும் இரண்டு சமூகங்களும் ஒரு தாய் பிள்ளைகள்தானா? அவ்வாறானால் பகைகளை மேலும் கூர்மையாக்கும் பிரச்சாரங்கள் தமிழ், முஸ்லிம் தரப்பு மேடைகளில் மேடையேறக் கூடாது.

நமது சமூகங்களின் மோதல்கள் கூர்மையடைந்தால், கையெடுத்து கேட்கும் நமது அதிகாரங்களை கையேந்திக் கேட்கும் நிலையே ஏற்படும்.



எம்.எஸ். அமீர் ஹுசைன்

## இவ் வருடம் மின்சார துண்டிப்பு இல்லை?

# அசுர வேகத்தில் உயர்கிறது மின் கட்டணம்?!

கடந்த சில வாரங்களாக மீண்டும் மின்சார கட்டணம் அதிகரிக்கப்படும் அல்லது ஜனவரி முதல் 06 மணித்தியாளங்களுக்கு மேல் மின்சார துண்டிப்பு நடைபெறும் என்ற கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வந்தன. ஆனாலும் ஜனவரி மாதம் முதல் 60 வீதம் முதல் 65 வீதம் வரையாக கட்டண உயர்வொன்றை செய்ய இருப்பதாக மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர 2022.12.27 ஆம் திகதி அறிவித்தார். எவ்வாறாயினும் கடந்த வாரம் அது தொடாடபான யோசனை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட ஏற்பாடாகி இருந்த போதும் சமர்ப்பிக் கப்படவில்லை. இவ்வார அமைச்சரவை கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த கட்டண உயர்வு அமைச்சரவை அங்கீகாரத்துடன் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும். இந்தளவு அதிகமாக மின்சார கட்டணத்தை உயர்ந்த பொதுப் பணன்பாட்டு ஆணைக்குழு அங்கீகரித்தால் ஜனவரி முதல் மின்சார பட்டியல் கட்டணம் மீண்டும் அதிகரிகக்ப்பட்டதாக வர இருக்கின்றது. அத்துடன் இவ்வாறு கட்டண உயர்வு செய்யப்படுமானால் ஜனவரி மாதம் முதல் மின்சார வெட்டு இருக்காது.

ஆனாலும் அமைச்சர் அதுபற்றி தெரிவிக்கையில் இவ்வாறாக மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை ஈடு செய்ய கட்டண அதிகரிப்பு செயய்ப்படாவிட்டால் ஜனவரியில் இருந்து 06 அல்லது ஆரரை மணித்தியாளம் மின் வெட்டை செய்ய வேண்டி வரும். மக்கள் நீண்ட நேரம் இருளில் இருக்கவும் பழக வேண்டும் என்றும் தெரிவித்தார். அதன்படி ஒன்றில் மின்சார கட்டண உயர்வு அல்லது கூடிய நேரம் இருளில். எது வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டியது மக்களே என்ற நிலை எற்பட்டிருக்கின்றது.

ஆனாலும் அமைச்சரின் கூற்றுப்படி மின்சார கட்டணம் ஜனவரியில் இருந்து 60 வீதத்தால் உயர்வடையும் சாத்தியம் அதிகம் இருக்கின்றன. அத்துடன் மின்சார சபையின் பொறியியலாளர்கள் தெரிவிக்கையில் மின்வெட்டுக்கான தேவைய தற்போதைக்கு இல்லை. காரணம் நீர் மின் உற்பத்தி நடைபெறும் நீர்த்தேக்கங்கள் அமைந்துள்ள பிரதேசங்களுக்கு கடந்த சில தினங்களாக போதுமான அளவு மழை வீழ்ச்சி இருந்ததால் நீர் மின்சார உற்றபத்தி முன்னர் போன்று இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும் அரசாங்கத்தின் நிலைப்பாடு மின்சார கட்டணத்தை எப்படியேனும் அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்பதாகும். அவ்வாறு மீண்டும் மின் கட்டணம் அதிகரிக்கப்படுமானால் மக்கள் அடுப்பங்கலையில் இருந்து சட்டிக்குள் விழுந்த கதையாகின்றது. ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்த மின்சார கட்டணத்தை 2022 ஆகஸ்ட் 10 ஆம் திகதியில் இருந்து 75மூ ஆல் அதிகரிக்க பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு அங்கீகாரம் வழங்கியது. ஒன்பது வருடங்களின் பின்னர் இவ்வாறான ஆகக் கூடுதலான அதிகரிப்பு செய்யப் பட்டிருக்கின்றது. மீண்டும் 05 மாத கால இடைவெளியில் 65மூ மின்சார கட்டண அதிகரிப்பை மக்கள் எவ்வாறு தாங்கிக்கொள்வார்கள் என்பது தான் பிரதான பிரச்சினையாக அமைகின்றது. 2013 ஆம் ஆண்டு மின்சார கட்டணம் 25மூ வீதத்தால் அதிகரிகக்ப்பட்டது. இவ்வாறான மின்சார கட்டண உயர்வு காரணமாக வீட்டுத் துறையினர், வர்த்தக வாணிப நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் கடுமையாக பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றன. அந்த வரிசையில் மின்சார கட்டண உயர்வால் இம்முறை மத வழிபாட்டு தளங்களும் இன, மத, வேறுபாடு இன்றி பாரிய நெருக்கடியை சந்திக்க வேண்டி ஏற்பட்டிருக்கின்றது.

மின் கட்ண அதிகரிப்பால் நெருக்கடிக்குள்ளாகும் மத வழிபாட்டுத் தளங்களுக்கு தீர்வாக சூரிய சக்தியில் இயங்கும் மின் பிறப்பாக்கிகளை பொறுத்துவதென்றும் அதற்கு குறைந்தபட்சம் மூன்ற மாத காலங்களாவது செல்லும் என்றும் அமைச்சர் தெரிவிக்கின்றார். இந்திய அரசாங்கம் இவ்வாறான திட்டம் ஒன்றுக்கு கடன் வழங்க முன்வந்திருப்பதால் அந்த கடனை பயன்படுத்தி சோலா பவர் மின் திட்டத்தை ஆரம்பித்து தீர்வு காண்பதென்றும் அமைச்சர் கூறினார்.

தற்போதைய நிலையில் மின்சார கட்டண உயர்வு காரணமாக உற்பத்தி பொருட்கள் அணைத்தினதும் விலைகள் மேலும் பல மடங்கு உயர்வடையும் அபாயம் நிலவுகின்றது. ஏனெனில் அனைத்து தொழிற்சாலைகளையும் உணவு பொருள் உற்பத்தி நிலையங்களையும் இந்த மின்சார கட்டண உயர்வு பாதித்திருக்கன்றது. அதிலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களாக 34 இலட்சம் குடும்பங்கள் அளவில் இருக்கின்றனர். தொடர்ச்சியாக இவ்வாறு அத்தியாவசியப் பொருட்களின் கட்டண அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு உயர்வு என்று அதிகரிப்பே தவிர எதிலும் குறைவு இல்லை.

சாதாரணமாக அபிவிருத்தி அடைந்த நாடுகளில் காணப்படுகின்ற அளவிற்கு தலைக்குரிய வருமான உயர்வோ அன்றாட வாழ்க்கை செலவை சமாளிக்க எந்தவிதமான வருமானமோ இல்லாத நிலையில் 54 இலட்சதிற்கு மேற்பட்ட மக்கள் வாழும் நாட்டில் இவ்வாறான விலை உயர்வருகளை எவ்வாறு மக்கள் சமாளிப்பது. குறிப்பாக தற்போதைய பொருளாதார நெருக்கடியால் அனைத்து பொருட்கள் சேவைகளதும் விலைகள் சுமார் 300மூ வீதம் உயர்வடைந்திருக்கின்றது. மக்கள் வாழ்க்கைப் போராட்டம் நடத்தி வருகின்றனர். பாடசாலை மாணவர்கள், குழந்தைகள் மத்தியில் போசாக்கின்மை பிரச்சினை ஒருபுரம். வருகின்ற பாடசாலை தவணையில் புதிய வகுப்புகள் ஆரம்பிக்கின்ற போது அடுத்த முதலாம் தவணைக்கு பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் கொள்வனவு செய்ய போகின்ற போதும் அப்பியாச புத்தகங்களின் விலைகள் இதே அளவில் உயர்வடைந்துள்ளன. கடந்த வருடம் 600 ரூபாவுக்கு வாங்கிய சப்பாத்து இப்போது 3000 ருபாவுக்கு மேல்.

ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான அரசாங்கம் இருக்கின்ற நிலையை சமாளித்து மக்களுக்கு ஏதாவதொரு வழியில் நிவாரணங்களை வழங்கி வாழ்க்கை செலவை குறைக்க நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்த்தால் நிலை படு மோசமடைந்திருக்கின்றது. வருமான வரி திருத்தச் சட்டத்தால் சாதாணமாக உழைக்கின்ற நடுத்தர வருமானம் பெறுபவர்கள் கூட பாதிப்பை எதிர்நோக் குகின்றனர். ஆனாலும் ஆட்சியாளர்களுக்கு எந்தவிதமான கஷடங்களும் இல்லை. அவர்கள் அரச சலுகைகள் வரப்பிரசாதங்களை அனுபவித்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பொதுமக்கள் பற்றி சிந்திக்காமல் நெருக்கடிக்குள் தள்ளி ஆட்சி நடத்தும் அரசாங்கங்களின் ஆயுள் நீண்ட காலம் நீடிப்பதில்லை. அதே நேரம் தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கான ஏற்பாடுகளையும் செய்து வருகின்றது. பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்தி முடிக்க வேண்டி இருப்பதால் அரசாங்கம் நிலைமையை எவ்வாறு சமாளிக்கும் என்பதை பொருத்திருந்தே பார்க்க வேண்டும்.